303

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUL 1955
MADRAS

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, வைகாசி உ௰ 3—6—55 தளிர்-35

303
3-55

# தல வழிபாட்டுச் சிறப்பு

1. தல வழிபாட்டுத் திருப் பயணத்தில் 'இடம்' 'நீர்' 'திருவுருவம்' என்னும் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்று சிறப்பியல்களையும் பயன் கொள்ளும் நலம் உண்டாகின்றது.

2. தலந்தோறும் இம் மூன்றின் தன்மைகள் வேறுபட்டிருப்பதனால், அவ் வேறுபாடுகளிற் படிந்து நலம் பெறுவதற்குத் திருப்பயணம் உதவியாயிருக்கின்றது.

3. தலம் என்பது திருக்கோயில் உள்ள இடமும் அதன் சூழலும் ஆகும்; பழைய காலத்தில் நம் முன்னோர்கள் அந்த இடத்தின் தனிச் சிறப்பால் இழுக்கப்பட்டு, மூல காரணமாகிய இறைவனை அங்கே வழிபாடு செய்தார்கள். அந்தக் கவர்ச்சி ஓரளவாவது என்றென்றும் இருக்குமாதலால் அந்த இடத்தில் பயில்வது சிறப்பாகும்; இது தலச் சிறப்பு.

4. ஒரு தலத்திற்குச் செல்வோர் அங்குள்ள நீரிலும் அது அங்கே தரும் உணவுப் பொருள்களிலும் மக்கள் குணங்களிலும் இயைந்து அதற்குரிய இயற்கை யாற்றலை அடைகின்றனர். இது தீர்த்தச் சிறப்பு.

5. 'இடம்' 'நீர்' என்னும் இரண்டின் தன்மையிலும் படிந்தவர்களுக்கு, அத் தன்மைகளை அப் பொருள்களுக்கு ஊட்டிச் செழிப்பித்த அறிவார்ந்த இயற்கையாற்றல் ஒன்று புலனாகும். அதுவே 'இறை' எனப் பெறும்.

பொருள்களின் நிலைமைகளுக் கேற்றபடி, இறையாற்றல் அங்கங்கும் வேறு வேறு வகையாய் விரி நிற்கும். பசுக்கள்தோறும் கறக்கப்படும் பால், நிறத்தில் ஒன்றுபோலத் தோன்றினாலும் உண்மையில் வெண்ணிறப் பசுவின் பால் ஒரு வகையாகவும், கருநிறப் பசுவின் பால் வேறொரு வகையாகவும் ஆற்றலில் வேறுபட்டிருத்தல் அறிகின்றோம். அதுபோலவே, இறைவனும் ஒவ்வொரு தலத்தின் தீர்த்தத்தின் வேறுபாட்டுக்கேற்றபடி அங்கங்கே வேறுபட்ட மூர்த்தியாய் விளங்குகின்றான்; ஈடுபாடும் வேறு வேறு வகையில் நிகழ்கின்றது. ஈடுபாட்டின் வேறுபாட்டிற் கேற்ப, அருளும் வண்ணங்களும் காட்சிகளுங்கூட வேறுபட்டு நிற்கின்றது.

தலந்தோறும் திருப்பயணம் செய்யும் அன்பர்களும் அத்தகைய மூர்த்தி வேறுபாடுகளிலும் காட்சி வேறுபாடுகளிலும் படிந்து நலனுறும் வாய்ப்பு உண்டாகின்றது. இது, மூர்த்திச் சிறப்பு.

# திருவள்ளுவர்

(ம. பொ. சி)

திருவள்ளுவர், இயற்றிய திருக்குறள், உலகப் பொது நூலாகி விட்டது. இதுவரை பதினைந்து மொழிகளில் அந் நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சமயத்தினரும் திருக்குறளைத் தத்தம் சமயத்துக்குரிய நூலாக மதிக்கின்றனர்.

சமயவாதிகளேயன்றி அரசியல் முற்போக்காளரும் திருக்குறளில் உள்ள பொருட்பாலைத் தங்களுக்கு வழி காட்டியாகக் கொள்ளுகின்றனர். பொருளாதாரப் புரட்சியாளரின் நிலையும் இதுவே.

இப்படி, எக் காலத்துக்கும், எந்நாட்டுக்கும், எச் சமயத்துக்கும்உரியதாகப்பெருமை பெற்று விட்ட திருக்குறளைப் பெற்றெடுத்ததற்காகத் தமிழர் ஒவ்வொருவரும் இறுமாப்புக் கொள்ள வேண்டும், கொள்ளத்தான் செய்கின்றனர்.

தமிழகத்துக்கு மங்காப் புகழ் தேடித் தந்த, அந்தத் திருவள்ளுவர் யார்? அவருடைய சாதி, சமயம், ஊர், யாவை? அவர் பிறந்து வளர்ந்த காலம் எது? என்ற விவரங்களையறிய விருப்பம் தோன்றுவது மனித சுபாவந்தான்.

திருக்குறள் என்ற ஒரு நூல் நம் கண்ணெதிரே கையகத்தே இருப்பினும் அதைக்கொண்டு, திருவள்ளுவரைப்பற்றி நமக்குத் தேவையான விவரங்களையெல்லாம் தெரிந்துகொள்ள முடியவில்லை.

ஆம். வள்ளுவப் பெருந்தகை திருக்குறளில் நமது உள்ளத்தைக் காட்டினாரேயன்றி, தம்முடைய சாதி, சமய, ஊர், காலம் ஆகிய எதைப் பற்றியும் குறிப்பிட்டாரில்லை. இப்படிக் குறிப்பிடாததற்கு அவரே காரணம் கூறுகின்றார்.

நிறை மொழி மாந்தர்
　　பெருமை—நிலத்து
மறை மொழி
　　காட்டிவிடும்

என்ற குறளில் "ஒருவன் எத்தகையவன் என்பதை அவனைப் பற்றி மக்களிடையே வழங்கி வரும் சொல்லைக் கொண்டு மதிப்பிட்டு விடலாம்" என்கின்றார்.

திருக்குறளைக் கொண்டு திருவள்ளுவருடைய வாழ்க்கை வரலாற்றை எழுத முடியாததால் கற்பனைச் சம்பவங்களைக் கொண்டு கதைகள் கட்டிவிட்டனர், சில புலவர்கள்.

திருவள்ளுவர் பகவன் என்னும் பார்ப்பனருக்கும், ஆதி என்னும் பறைச்சிக்கும் பிறந்தவர் என்பது ஒரு செய்தி. இந்தக் கதையைக் கட்டிவிட்டவர் கலப்புத் திருமணத்தில் நம்பிக்கையுள்ள 'சீர்திருத்த வாதி' போலும்!

திருவள்ளுவர் பிறந்தது சென்னைத் திருமயிலையில்தான் என்கின்றனர் ஒரு சாரார். ஆனால் திருமயிலையில் திருவள்ளுவர்பெயரால் ஏதோ ஒரு கோவில் இருக்கிறது என்பதைத் தவிர இந்தக் கூற்றை உறுதி செய்வதற்கு வேறு சான்று இல்லை.

திருவள்ளுவருடைய தோற்றத்தைத் திருக்குறள் சான்றுகளைக் கொண்டு படம் வரைந்து காட்டுவதற்கில்லை. உலகத்தார் பழிப்புக்கு இடமில்லாமல் வாழ்வோர் "மழித்தலும் நீட்டலும் வேண்டா" என்று அழுத்தந் திருத்தமாக அறிவித்துள்ளார் வள்ளுவர். ஆகவே வள்ளுவர் மொட்டைத் தலையர் என்றோ, தாடியும் குடுமியும் வைத்துக் கொண்டிருந்தார் என்றோ யாரும் சாதிப்பதற்கில்லை.

ஆனால் சைவச் சார்புடைய மக்கள், சடை முடியும் தாடியும் நெற்றியில் நீறும் மார்பில் பூணூலும் கையில்செபமாலையும் காட்சி தரும் கோலத்துடன் சித்திரம் தீட்டிக் காட்டியுள்ளனர். இதற்கும் நூற்சான்று இருப்பதாகத் தெரியவில்லை.

சமயவாதிகள் மட்டும் திருவள்ளுவர் தத்தம் சமயத்தவர் என்ற வழக்கை வலியுறுத்துவதற்குத் திருக்குறளிலிருந்து சான்றுகள் காட்டுகின்றனர்.

திருக்குறளில் 'மலர்மிசை ஏகினான்' எனக் கடவுளைக் குறிப்பிடுவதால் வள்ளுவர் புத்த மதத்தினரே என்கின்றனர் பௌத்தர்கள். இல்லை, கடவுளை "எண் குணத்தான்" என்ற பெயரில் குறிப்பிட்டிருப்பதால் திருவள்ளுவர் சைவரே என்கின்றனர் சிவ மதத்தார். இல்லை, இல்லை 'தாமரைக் கண்ணன்' என்ற திருமால் பெயரைத் திருக்குறளில் வைத்ததனால் வைணவரே என்று வற்புறுத்துகின்றனர் விஷ்ணு மதத்தார்.

அதெல்லாமில்லை திருவள்ளுவர் 'அப்பட்ட நாத்திகர்' என்று ஆதாரமில்லாமலே அடித்துப் பேசுகின்றனர் அறிவு இயக்க வாதிகள்.

இவர்களிலே ஒரு சாரார் "திருவள்ளுவர் என்ற ஒருவர் இருந்ததாகச் சொல்லுவதற்கே சான்று இல்லை. இருந்திருந்தால் அந்தத் திருவள்ளுவர்தான் திருக்குறளை எழுதினார் என்று அறுதியிட்டு உறுதி கூற முடியாது" என்று அவையேறிப் பேசுகின்றனர்.

இப்படி ஒவ்வொரு சாராரும் வெவ்வேறு கோணத்திலிருந்து திருவள்ளுவரைக் காண்கின்றனர். தத்தம் கருத்துக்கு ஏற்ப

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், இ. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

லாம் அரசு போன்ற அரசமரத்தின் கிளை ஒன்றை மணப்பந்தலில் நடுகின்றனர்.

முதலில் உன்னை மணமகனின் வலப்புறம் உட்கார வைப்பர். சில சடங்குகள் நிகழ்ந்த பின் மணமகன் உனக்கு மங்கல அணி அணிவான். அப்பொழுது கெட்டிமேளம் முழங்கும்; பெரியோர்களின் ஆசி மஞ்சள் அரிசியுடன் உங்கள் மீது சொரியும். பின் கோத்த கைகளுடன் அக்கினியை மும்முறை வலம் வந்த பின் உன்னை மணமகனின் இடப்புறம் அமர்த்துவர். ஏனெனில் இப்பொழுது நீ அவனது வாழ்க்கையின் துணைவியாகி விட்டாய். பெண்மைக்கு ஏற்றது இடப்புறம்தான். ஆகவே மணமகன் தன் இடப்புறத்தை உனக்குக் கொடுக்கிறான். பிறகு பட்டம் கட்டுதல் நடைபெறும். வாழ்க்கையில் அப்பாவுக்கு அடுத்தபடி பொறுப்புள்ள நம் அம்மான் தன் ஆசியும் அன்பும் உனக்கு என்றும் உண்டு என்பதன் அடையாளமாக உன் அழகிய பிறை நெற்றியில் பட்டம் கட்டுவர்.

பிறகு பெரியோர்கள் சேடை இடுவர். இரண்டு கைகளிலும் நெல்லை அள்ளிக்கொண்டு மணமக்கள் இருவரையும் சுற்றி நெல்லைச் சொரிவது அழகிய சடங்காயிருக்கும். தம் வாழ்க்கையில் வளத்தைக் காட்டுவது நெல். ஆகவே அதைக் கொண்டு உங்கள் வாழ்க்கையில் வளம் பெருகட்டும் என்று ஆசீர்வதிக்கின்றனர்.

அத்துடன் திருமணத்தின் முக்கிய சடங்குகள் முடிகின்றன.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குக் கோலங்கள் புனைந்து, குலப்பெயரிட்டுக் கூத்தாடுகின்றனர்.

ஆனால் மேலே சொன்ன ஒவ்வொரு சாராரின் கூற்றிலும் ஒரு சில உண்மைகள் இருக்கலாம். ஆனால் எந்த ஒரு சாராரும் முழு உண்மையைக் கூறிவிட்டதாகச் சொல்வதற்கில்லை. எல்லாம் பிறவிக்குருடன் யானையைக் கண்ட கதை போலத்தான்.

ஒருவர் என்ன சொல்லுகிறார் என்று கவனியாமல் சொல்லுபவர் யார்? என்று ஆராய்வது இன்றைய உலகத்தின் இயல்பாகிவிட்டது. அதனால் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் நமக்கு என்ன போதிக்கிறது என்று ஆலோசிப்பதைவிடத்திருக்குறள் எழுதிய திருவள்ளுவர் யார்? என்பதை ஆராய்வதிலேயே நம்முடைய ஆயுளைப் பாழாக்குகின்றோம். இது திருக்குறளில் திருவள்ளுவர் வற்புறுத்திய கொள்கைக்கே விரோதமான குணமாகும்.

எப்பொருள் யார் யார் வாய்
கேட்பினும்—அப்பொருள்
மெய்ப்பொருள்
காண்ப தறிவு.

என்ற திருக்குறளில் ஒரு பொருளைச்சொல்லுபவருக்குமுக்கியத்துவம் கொடுக்காமல் சொல்லப்படும் பொருளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதிலுள்ள உண்மையை ஆராய வேண்டும் என்கின்றார் திருவள்ளுவர்.

பொதுவாக ஆராய்ச்சி வேண்டியதுதான். ஆனால் திருவள்ளுவருடைய வாழ்க்கை, நம்முடைய ஆராய்ச்சிக்கு அகப்படாமல் மறைந்து கிடக்கின்றது. ஆனால் அவருடைய வாய்மொழியான திருக்குறள் நமது கண்ணெதிரே வையகத்தே காட்சியளிக்கிறது.

ஆகவே காட்சிக்கு அப்பாற்பட்டவராகிவிட்ட திருவள்ளுவரைப்பற்றி ஆராய்வதை விட்டுவிட்டுக்காட்சிக்கும் கருத்துக்கும் உரியதான திருக்குறளை ஆராய்ந்து அதன் உண்மையை உள்ளத்தில் பதிய வைத்து உலகத்துக்குப் பயன்படத்தக்கவகையில் வாழ்வோமாக!

'சங்கப் பலகை'

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

# மண நிகழ்ச்சிகளின் மாண்பு.

(மா. கோவிந்தராசன்)

அன்பார்ந்த தங்கைக்கு,

உன் திருமணம் நிச்சயமாகி இருப்பதாக அப்பா எழுதியிருக்கிறார். இச்செய்தி எனக்களித்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையும் உண்டோ. இப்பொழுதெல்லாம் உன் உள்ளம் கற்பனைச் சிறகு விரித்து வான வெளியில் பறந்து கொண்டிருக்கும்; யாவும் இன்பமயமாய்த் தோன்றும். நீல வானம், வெண்ணிலவு, வண்ண மலர்கள் யாவும் புதிய வனப்புடன் தோன்றும். இங்ஙனம் உன் உள்ளத்தில் எழுச்சியும், கற்பனையும் தோற்றுவிக்கும் திருமணத்தைப் பற்றி இங்கு எழுதுவது பொருந்தும்.

திருமணச் சடங்குகள் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாய் நடக்கின்றன. அவை அந்தந்த மக்களுடைய பண்பாட்டின் பிரதிபலிப்பாய் அமைகின்றன. நம் தமிழ் நாட்டில் நடைபெறும் திருமண முறைகளிலேயும் பழைய பண்பாட்டின் பல அம்சங்களைக் காண்கிறோம். அவற்றுள் சில சடங்குகளில் ஆழ்ந்த பொருள்கள் பொதிந்துள்ளன. அவற்றைப் பற்றி எனக்குத் தெரிந்தவரை உனக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

முதலில் உன்னையும் உன் காதலரையும் கீழ்த்திசை நோக்கி அமரும் வண்ணம் செய்வார்கள். கீழ்த் திசையைத் தேர்ந்தெடுத்த தன் நோக்கத்தை நீ அறிய வேண்டாமா? நம் நாட்டிலே எந்த நல்ல காரியங்களுக்கும் கிழக்கு நோக்கித்தான் அமருவார்கள். ஏனெனில் கிழக்குத் திசையை வளர்முகமாகக் கருதுகிறார்கள் நம் பெரியோர். கீழ்த்திசையில்தான் ஒளி உதயமாகிறது. அது பிறகு வளர்வதும் அத் திசையில்தான். ஆகவே வளர்ச்சி பெறுவதற்கான எல்லாச் செயல்களிலும் ஈடுபடும் பொழுது வளர்முகமான அக் கீழ்த்திசையைநோக்கி அமர்வது நம் மரபு.

திருமணத்தை ஆயிரங்காலத்துப் பயிர் என நாம் வழங்குகிறோம். எனவே அத்தகைய திருமணத்தில், வாழ்க்கையின் வளர்ச்சி தொடங்கும் அவ்விழாவில், மணமக்களாகிய உங்கள் இருவரையும் கீழ்த்திசை நோக்கி அமர்த்துவர் எதிரில் தீ வளர்க்கின்றனர். ஏனெனில் முதற் பொருள்கள் ஐந்தான நீர், நெருப்பு, காற்று, மண், வெளி இவற்றுள் எங்கும் ஊடுருவி நிற்பதும் நாம் நினைத்தவேளையில் கண்ணுக்கு முன் வரவழைத்துக் கொள்ளக்கூடியதுமான முதற் பொருள் நெருப்பே. மேலும் இது மேல் நோக்கி வளரக் கூடியது. இதற்கு முக்கியத்துவம் கொடுத்து இதன் முன்னிலையில் மணமக்களின் கைகளை இணைத்து வைக்கின்றனர் பெரியோர்.

இனி மணவறையை அலங்கரிக்கும் பொருள்களைக் கவனி. உங்கள் எதிரில் கிளைவிளக்கு ஒன்று ஒளிருகிறது உன் இல்வாழ்க்கையும் இதுபோல் பல கிளைகள் விட்டுப் பல்கிப் பெருக வேண்டும் என்பதை இவ்விளக்கு உனக்கு விளக்குகிறது. அதன் தென்புறத்தில் ஒரு குடத்தையும் அதனுள் ஒளிரும் விளக்கையும் காண்பாய் இதுதான் குடவிளக்கு என்பது. இதன் பொருள் குடத்திலிட்ட விளக்கினைப்போல் நீ உன் இல்லத்தரசியாய், அடக்கமாய் ஒளிரவேண்டும்; உன் கணவன் அரவணைப்பில் வாழ வேண்டும் என்பது.

மறு புறம் அரசாணிக்கால் ஒன்றைக் காண்பாய். இது இயற்கையின் சின்னமாய் இங்கே எழுந்தருளியுள்ளது. ஆதி காலத்தில் முக்கிய காரியங்கள் நிகழ்வதெல்லாம் மரத்தினடியில்தான். கூட்டங்கள் கூடுவது, திருமணங்கள் நிகழ்வது எல்லாம் இம்மரத்தின் கீழ்தான்; பிறகு வீடுகளில் திருமணம் செய்யும் முறை ஏற்பட்ட பிறகும் நம் பண்டைய வழக்கின் நினைவாக, நமக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பை நினைவு படுத்திக்கொள்ள, மரங்களுக்கெல்

---

தமிழகத்துக்கு மட்டுமன்றி, மக்களினத்துக்கே, வாழ்க்கை மாட்சி வழங்கும் மன்பதைப் பெருவிழா, அனைத்துலக அருள் பொருள் விழா என்றே நினைத்தனையும் ஐயமின்றித் தெளிந்து, அனைவரும் ஈடுபட்டுப் பயன் பெறுதற்குரியது திருக்கழுக்குன்றத்தின் ஆனி மகத்து இசை ஞான விழா!

உலகோர் அனைவரும் ஆனி மகத்தில் திருக்கழுக்குன்றத்து மலைச் சாரலில் திரள்க! திரள்க!

குறிப்பு:— இவ்வாண்டு திருக்கழுக்குன்றத்து ஆனிமகத் திருவிழா ஜூன் 23, 24, 25, 26- வியாழன் வெள்ளி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறுகின்றது.

மதுராந்தகத்தை அடுத்த மாம்பாக்கம் குருகுலத்தில், பொதுவேதமாகிய திருக்குறளுக்கு ஜூன் 21-ல் விழா நடைபெறும்; அங்கிருந்து குருகுலக் குழுவினர் அன்று மாலையே குருகுல இடமாகிய வடதிருச்சிற்றம்பலததிலிருந்து மணிவாசகரோடும் திருக்கழுக்குன்றத்துக்கு வழிக்கொள்வர்; கொண்டு, ஜூன் 23-மாலை திருக்கழுக்குன்றத்தை அடைவர். அக் குழுவினரோடும் அன்பர்கள் கலந்துகொள்ளலாம்.

முடைய பெருந் தமிழ்த் தலைவர்கள் நால்வர்கள் என்று உணராத இக்காலத் தமிழன்பர்களைத் "தம்மானை அறியாத சாதியார்" என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

## முன்னேற்றப் பாதை:

அக நலத்தோடு புற நலங்களையும் முதன்மையாகக் காத்துக் கொள்ள வேண்டும்; ஆனால் அவற்றோடு நின்றுவிடாமல் அவைகளை நிலைக்கவைக்கும் முறையிலும் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு மேல் மேல் நுட்பமாக உயிரோடு தொடர்புடைய உயர் நலங்களையும் அடையும் வகையில் உண்மையோடு ஒட்டி ஒழுகவேண்டும்; இல்லையேல் பயனில்லை என்பதே நால்வர்கள் காட்டும் நல்ல முன்னேற்றப் பாதை.

இதை விளக்க அவர்கள் செய்தது வெற்றுச் சமயப் புரட்சியன்று, வாழ்க்கைச் சமயப் புரட்சி; வேற்றுச் சமயங்களுக்கிடையில் அவர்கள் கொள்கைகளும் ஒரு சமயமாக வைத்து எண்ணப்பட்டதாயினும், திருவள்ளுவரைத் தம் தலைவராகக் கொண்டு அவரை நிறைவாகப் பின்பற்றி விளக்கிய சிவ சமயம், ஒரு சமயமன்று, 'சமயாதீதம்' 'சமயங்கடந்த சமரசம்' 'பொதுச் சமயம்' என்று பின்வந்த தாயுமானார், இராமலிங்கர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. போன்றவர்கள் விளக்கியிருப்பதை அன்பர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்

## திருக்கழுக்குன்றத் திருமுறை விழா:

இவ்வுண்மைகளை ஒட்டிப் பார்க்கிறபோது தமிழ் நன்மக்களின் எல்லா முன்னேற்றத்துக்கும் உள்ள ஒரே வழி நால்வர் பெருமக்களைப் பின் பற்றி அவர்கள் அருளிய திருமுறைகளுக்குள்ள சிறப்பை விளக்கி அவற்றின்வழி அவர்கள் வற்புறுத்திய உண்மைகளையெல்லாம் மக்களிடை வற்புறுத்துவதே நல்லோர் கடன் என்பது தெரியவரும்.

தமிழ் மக்களிடை, கட்சிப் பிணக்கும் பிறவும் வளராதபடி இருமை நலங்களையும் நல்கும் இத் தெளிவு(ஞான)த் தொண்டைச் செய்யத் தக்கவர்கள் சான்றோர்களே! தொண்ட நாடு சான்றோருடையது என்று பண்டுதொட்டுச் சிறப்பிக்கப் பட்டுவருகின்றது. ஆகவே, தொண்டை நாட்டில், நால்வர் பாடலும் பெற்று உடலுக்கும் உயிருக்கும் நலம் செய்யும் மலைப் பதியாக இலகும் திருக்கழுக்குன்றத்தில், இறைவனிடம் தாம் பெற்ற இருமை ஞானமாகிய இரு திருவடிகளை ஞானத்தில் ஞானம் என்னும் உயர்வற உயர்ந்த பெருநிலை எய்திய மாணிக்கவாசகர் உலகவர் உய்யும் பொருட்டு வைத்தருளிய இடத்தில், திருமுறைகளுக்கு ஆண்டுதோறும் அவர்தம் ஆனிமகத் திருநாளில் பெருவிழாச் செய்யப் பெறுகின்றது.

கடந்த பத்தாண்டுகளாகச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் அதனைச் சிறப்புற நடத்திவருகின்றனர். நாளடைவில் அது தமிழகத்துப் பெருவிழாவாகப் பழந்தமிழ் நாட்டு 'இந்திர விழா'ப் போல வளர வேண்டும் என்று சான்றோர்கள் விரும்புகிறார்கள்.

அவ் விழாவில் பேரறிஞர்களின் ஆய்வுரைகள் மிளிரும் திருமுறைப் பேரவையும், இன்னிசை வாணர்களின் இசையரங்குகளும், மலைவலமாக நால்வர்கட்கும் யானையின் மீதேற்றிய திருமுறைகளுக்கும் திருவுலாவும், திருக்கோயில் வழிபாடு தேனிப்பு முதலிய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுப் பல்லாயிரவர்க்கு அறிவும் அன்பும் தெளிவும் உருக்கமும் நல்கி வருகின்றன.

## அன்பர்கள் கடன்:

திருவையாற்றில் தியாகராயர் கீர்த்தனைகளில் பயிற்சியும் ஈடுபாடும் உடையவரெல்லாரும் சேர்ந்து செய்யும் இசை விழாவைப்போல, திருமுறைகளில் பயிற்சியும் ஈடுபாடும் உடைய ஓதுவார்களும் பிறரும் ஈடுபட்டு எவ்வளவும் சிறப்பாக நடத்தத் தக்கது திருக்கழுக்குன்ற விழா!

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் முன்னின்று நடத்திவந்தாலும், அவ்விழாவை அவர்களோடு கலந்து யாரும் அதில் ஈடுபட்டுத் தத்தம் விருப்பத்திற்கேற்ப அதனைத் தக்க முறையில் நடத்திப் பயன் காணலாம். சென்னையிலுள்ள பல்வேறு தமிழ் சமயச் சார்பான கழகங்களும், மதுராந்தகத்தை அடுத்துள்ள திருக்குறட் செயலகத்தாராகிய மாம்பாக்கம் குருகுலத்தாரும் அவ்விழாவில் பெரிதும் ஈடுபட்டுச் சிறப்பித்து வருகின்றனர்.

அவ்விழாவை ஏதோ ஒரு சமய விழா என்பதுபோல எளிதாக எண்ணிவிடாமல், தமிழ், தமிழ்க்கலை, தமிழ் இயல் இசை நாடகம், தமிழ்ப் பண்பாடு, தமிழர், தமிழர் உரிமைகள் என்னும் வகைகளில் ஆர்வம் காட்டும் தமிழகத்தின் வாழ்க்கைப் பெருவிழா என்று தெளிந்து, தமிழன்பர்கள் அனைவரும் முன்வந்து ஈடுபட்டு மேன்மேற் சிறப்புற நடத்தி நலங்காண வேண்டும் என்று தெரிவிக்கவேண்டியது கடமையாக இருக்கிறது.

தது தமிழ்மொழி தாழ்ந்தது என்று எண்ணும் மடமையிற் புகுந்த நாட்டு மக்களுக்குத் திருமுறைகளின் வழி தமிழின் சிறப்பை உணர்த்தினர்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்னும் உயர் நிலையில் இருந்து பிறழ்ந்து பல பிரிவாகப் பிரிந்த தமிழ் மக்களைத் 'தமிழன்' என்று மொழிப் பெயரால் ஒன்றுபட்டுத் தலைநிமிர்ந்து நிற்கும்படி முதன் முதற் கற்பித்தனர்.

தமிழில் புதிய பல கவிதை வகைகளை வகுத்துக் காட்டி அதனை வளர்த்தனர். தமிழியலை மட்டுமன்றி இசை நாடகப் பகுதிகளையும் தம் பதிகங்களாலும், ஆங்காங்கு நடத்திவைத்த விழாக்களாலும் ஓம்பினர்.

வேற்றவர்கள் பலர் இந் நாட்டில் நுழையத் தொடங்கிய போது பழந் தமிழர் வாழ்வியலில் கலந்து நின்ற கடவுட் கொள்கை திருவள்ளுவரால் தெளித்தெடுத்து அவ்வேற்றவர்களும் ஒப்பப் பொதுமுறையில் எடுத்துக் காட்டப்பட்டது. என்றாலும், அவ் வேற்றவர்கள் மேலும் மேலும் முனைந்து இயற்கைக்கும் உண்மைக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் ஒவ்வாத தம் சமயக் கொள்கைகளைச் செல்வாக்கோடு இந் நாட்டில் பரப்பி வந்தனர். எனவே, நால்வர் பெருமக்கள் திருவள்ளுவருடைய கடவுட் கொள்கையையே சிறப்பு முறையில் சிவசமய இயக்கமாக விளக்கிப் பரவச் செய்து மாற்றாரைப் புறங்கண்டனர்.

கொல்லாமை என்னும் போரால் அயலவர்கள் கொண்ட எள்ளி நகையாடத்தக்க இழிந்த பழக்க வழக்கங்களையும், தாய்மை நிலையுடைய பெண் பிறவி தாழ்ந்தது என்னும் தவறான முடிவையும், இறைவன் ஒருவன் உண்டு என்று ஒப்புக்கொள்ளாத இழிவையும், இயற்கைக்கு மாறான துறவு நிலையை வற்புறுத்தும் போலி நெறியையும் எல்லாம் கண்டித்து ஒழித்தனர்.

திருவள்ளுவர் வழியில் மக்கள் மணம் பூண்டு இல்லறம் நடத்தி இம்மையில் அடையத்தக்க இன்பங்களையெல்லாம் இனிது நுகர்ந்து அந்நிலையிலேயே உள்ளத் துறவைப் பெற்று உண்மை அருள் நலத்தோடு வாழவேண்டும் என்று வற்புறுத்தி அதற்கேற்ப எல்லாவற்றையும் இயக்கும் முழுமுதற் செம்பொருளும் 'அம்மை யப்பர்' கோலத்திலேயே வயங்குகின்றது என்பதையும் எடுத்துக்காட்டினர்.

உயிரில்லை, கடவுள் இல்லை, வினையில்லை, எல்லாம் விதியே, மறுபிறப்பு இல்லை, மக்கள் வாழ்க்கைக்கும் இயற்கை நிகழ்ச்சிகட்கும் தொடர்பு இல்லை என்றெல்லாம் எண்ணும் மக்கள் மனநிலைகளையும் மற்றச் சமயங்களையும் கண்டித்து, உயிர் உண்டு, வினை உண்டு, முயற்சி வேண்டும், மறுபிறப்பு உண்டு, வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் தொடர்பு உண்டு என்றெல்லாம் விளக்கி நிறுவினர்.

ஆருயிர்த் தொண்டு செய்யும் அறப்பெரு நிலையங்களாக, அரிய கலைகள் வளரும் பல்கலைக் கழகங்களாக, அண்டபிண்டங்களின் நுட்பங்களை வாழ்க்கையின் வழிவகைகளை விளக்கும் அரும்பெரும் காட்சிச் சாலைகளாக நூற்றுக்கணக்கான திருக்கோயில்களை அரசர்களையும் மக்களையும் தூண்டி, இந் நாடு முழுவதும் அமைக்கச் செய்து அவற்றைத் தம் தமிழ்ப் பதிகங்களால் சிறப்பித்துப் பாடல் பெற்ற பதி என்னும் சிறப்பு நிலையை உண்டாக்கி நிலைப்பித்தனர்.

பிறப்பால் உயர்வு தாழ்வு கருதும் பிழை மனப்பான்மையைத் தம் வாழ்க்கையிலேயே மறுத்து நடந்து காட்டினர்.

சுருங்கச் சொன்னால் நால்வர் பெருமக்கள், மக்கள் வாழ்க்கையில் இம்மை மறுமை நலங்களை அடைதற்கு வேண்டிய எல்லாச் சீர்திருத்தங்களையும், மறுமலர்ச்சிகளையும் புரட்சிகளையும் அப்போதே மேற்கொண்டனர் எனலாம்.

திருமுறைகளையும் நால்வர் பெருமக்களின் வாழ்க்கை வரலாறுகளையும் ஊன்றிப் படிப்பார்க்கு இவ் வுண்மைகள் தெளிவாகத் தெரியும்.

## இரங்கத்தக்க நிலை:

அவர்கள் காட்டிய வழியைத் தொடர்ந்து தக்கபடி போற்றாத ஒன்றே, இன்று நம் நாடு மொழி அரசு முதலியனவெல்லாம் நிலைகுலைந்திருப்பதற்குக் காரணம். இதனை நன்காராய்ந்து தெளியாமல், தமிழ் அன்பர்களிற் சிலர் 'சமயம்' என்ற துறையையே தக்க அடிப்படையின்றி வெறுத்து ஒதுக்கி, உண்மையறியும் வேட்கையுமின்றித் தம் அறிவு திரு ஆற்றல் முயற்சிகளை எல்லாம் விழலுக்கிறைத்து வெற்றாரவாரம் செய்து வருவது பெரிதும் இரங்கத் தக்கதாக இருக்கிறது.

தமிழின் மறுமலர்ச்சி சாதி ஒழிப்பு முதலிய சீர்திருத்தம், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவன்' என்னும் புரட்சி, மன்பதைத் தொண்டு இவைகளுக்கெல்லாம் வித்திட்டு, முழுநலத்தோடு, அவை மிளிரும் வகையில் திறம்பட வேலை செய்த தம்

# இருமையும் மலரும் அருமை விழா

(ந. ரா. ஆடலரசு.)

மக்கள் நிலை:

மக்கள் வாழ்க்கையில் இன்று பல துறைகளிலும் குழப்பம் மேலிட்டிருக்கின்றது.

வாழ்க்கை 'இம்மை' 'மறுமை' என்னும் 'இருமை' நிலைகளில் வைத்து எண்ணப்பட்டு அவற்றிற்குரிய நலங்களில் கருத்தாக இருந்து நடத்தப்படவேண்டியிருக்கிறது.

பொதுமக்களுட் பெரும்பாலோர் வறுமையிற் கிடந்து, இம்மை நலங்களுக்கு அடிப்படையானவை என்னும் தெளிவுமின்றி, அதனை இன்பமாக நடத்துதற்கில்லாவிட்டாலும் துன்பமில்லாமல் உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் கிடைத்தாலும் போதும் என்று எண்ணி, அவற்றை அடைவதற்கே நாளும் முயன்று அல்லலுற்று உயர் நாட்டங் கொள்ள வழியின்றி இருந்து வருகின்றனர்.

அவர்களுட் பலர் மறுமை பற்றிய தெளிவு சிறிதுமின்றி அதனைக் கூட்டும் சமய வாழ்க்கையை வெறும் மூடப் பழக்க வழக்கச் சடங்கு வாழ்க்கையாகவும், சிலர் புல்லிய புற நலங்களையே குறிக்கோளாகக் கொண்ட போலிச் சமய வாழ்க்கையாகவும் நடத்தி வருகின்றனர்.

இத்தகைய பொது மக்களால், வாய்த்துள்ள இம்மை நலங்களையே காத்துக்கொள்ள முடியாமலிருப்பது இயல்பாவதோடு, இம்மையையே இழக்கும் இவர்கட்கு மறுமை நலம் சிறிதும் இராது என்பதிலும் யாதும் ஐயமில்லை.

இயக்கக்காரர்கள் நிலை:

இவ்வாறு இருமை நலமும் இழந்து அழிந்துவரும் பொது மக்களை, இம்மை நாட்டம் மட்டுமே உடைய இரக்கமும் நாட்டுப் பற்றும் கொண்ட புதுமையர்களிற் சிலர், சமயத் துறையில் புகுந்துவிட்ட ஊழல்கள் மூடத் தன்மைகள் முதலியவற்றை எடுத்துக்காட்டித் திருப்பி இம்மைக்குரிய புற நலங்களைமட்டுமே ஓம்பிக்கொள்ளுமாறு செய்ய முனைந்துவிடுனர். அப் புறநலங்கள் எல்லாவற்றிற்குமே அடிப்படையான அறவாழ்க்கை, உண்மையை ஒட்டியில்லாத காரணத்தால், நிலைக்க முடியாத வகையிலேயே அவர்களால் வற்புறுத்தப்படுகின்றது.

இடைக்காலத்தில் தெளிவற்ற போக்கில் சமயத்தை ஓம்பி வந்த இந்நாட்டு மக்கள் பல் வேறு சூழ் நிலைகளால் தம் மொழி நாடு அரசு முதலியவைகளை நிலைகுலையும்படி விட்டுவிட்டார்கள். இப்போது அவற்றை உயரிய முறையில் காக்கும் எண்ணத்துடன் பணி செய்யும் புதுமையர்கள் தம்முடைய நிறைநல மற்ற செயல்களையே 'சீர்திருத்தம்' 'மறுமலர்ச்சி' 'புரட்சி' என்று விளம்பரப்படுத்திக் கொள்ளுகிறார்கள்

நால்வர்கள் இயக்கம்:

ஆனால், கடைச்சங்க காலத்தும் அதனை அடுத்தும் செல்வாக்கோடு நுழைந்த வேற்றவர்களின் மொழி சமய அரசியல் பழக்க வழக்க நிலைகளைக் கண்டு இந் நாட்டு நலங்களையெல்லாம் நன்கு ஓம்புதற்கு உண்மை முதலிய உணர்ச்சியை மக்களுக்கு ஊட்டி மிகப் பரவலாகப் பணி மேற்கொண்டவர்கள் மாணிக்கவாசகர், அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் நால்வர் பெருமக்களாவர். ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள், இயக்க முறையில் அருளடிப் படையுடன் மேற்கொண்ட பணிகள்தாம், முழுநலம் பயக்கும் சீர்திருத்தம் மறுமலர்ச்சி புரட்சி என்னும் இயக்கச் சொற்களுக்கு இலக்கியங்களாகும் என்று பேரறிஞர்கள் பலரும் விளக்கி வற்புறுத்திவருகின்றனர் நால்வர் பெருமக்கள் அருளிய தேவார திருவாசக முதலிய திருமுறைகளில் இவ்வுண்மைக்கு ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

நால்வரும் திருமுறைகளும் சாதித்தவை:

தமிழர்களின் உயிராகிய தமிழ் மொழியின் பீடு வேற்றவர் வரவால் அழியத் தொடங்கிய காலத்தில் நால்வர்கள் தோன்றி நாடெங்கும் அருள் வலிவோடு சுற்றித் தமிழ்ப்பதிகங்கள் பாடித் தமிழின் ஆற்றலை மக்களுக்கு எடுத்துக் காட்டினர்.

தவப் பயிற்சிக்கு எனப் பழந் தமிழ் முன்னோர்கள் கொண்ட மந்திர ஒலிகளே பிற்காலத்தில் தனிமொழியாக வளர்ந்தபோது அதனைத் தவமொழி என்னும் பொருளில் வடமொழி (வடக்கிருத்தல்-தவமிருத்தல்) என்றும், தவத்தின் பயனாகிய ஞானத்தைப் பரப்பும் நம் தமிழ் மொழியைத் தென்மொழி (தென்—ஞானம்) என்றும் வழங்கிவந்தாராகத், தமிழ்மொழி ஒன்றுக்கே உட்பட்டு ஓராட்சியின் கீழிருந்த இந் நாவலந்தீவு பின்னால் பல் வேறு மொழி வழங்கும் நாடாகப்பிரிந்தபின், வடமொழி உயர்ந்

சிந்தாமணியை அதுமுதல் இலக்கிய அழகுக்கும், பண்புப் பயிற்சிக்கும் ஒரு துணை நூலாகப் படிப்பதும் பெரிய புராணத்தை, இருமைக்கும் உயிர்க்கு அருள் உறுதி பயக்கும் மெய்யுணர்வு நூலாகக் கற்பதும் பாராயணம் செய்வதும் மரபாயிற்று.

மெய்யுணர்வுடன் இலக்கியம், கலை, கதை, கவிதை, வரலாறு முதலிய பல நலங்களும் பெரிய புராணத்தில் நிரம்பியிருத்தலின், இது குறைவில்லாத ஒரு நிறைவுச் செந்தமிழ் நிதியம் என்று புகழ்பெற்று ஓங்கி வருகின்றது! மதிப்பில் பெரிய புராணம் ஆயிற்று. ஆசிரியரும், 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவர்' என்று புகழ்பெற்றார்.

'உலகெலாம்' என்னும் வான் மொழி கொண்டு அடியெடுத்து, அம்பலவாணர் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்கி, உடம்படைந்த உயிர்கள் தம் பிறவிப் பயனைச் சாரும்படி, எடுக்கு மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய் நடக்கு மேன்மைக்குக் கடக் களிற்றுப் பெருமானைக் கருத் திருத்தி, எளிய நடையில் 'திருத் தொண்டர் புராணம்' என்னும் பெயருடன் செய்யத் தொடங்கிய இந்நூல், 4253 விருத்தச் செய்யுட்களால் நிறைவேறியது.

'எடுக்கு மாக்கதை' என்பது சேக்கிழார் வாக்காதலின், 'பெரிய புராணம்'என வழங்கும் பெயரும் அவர் கருத்துக்கு இசைவாகவே உள்ளது.

பெயருக்கு ஏற்றபடி, அளவிலும் இது விரிநூலே. இதற்கு முதல் நூலாயும், தென் தமிழ்ப் பயனாயும் உள்ள திருத்தொண்டத் தொகை, நம்பியாரூரர் அருளிய ஒரு தொகை நூல்; அதன் வழிநூலாயும் நம்பியாண்டார் நம்பிகள் வழிபடு கடவுளின் அறிவுரைப் பயனாயும் உள்ள திருத்தொண்டத் திருவந்தாதி ஒரு வகைநூல்; பெரிய புராணம் அதன் சார்பு நூலாயும்,அம்பலவாணர் அருட் பயனாயும் உள்ள ஒரு விரிநூல்.

விரிநூலாதலின், வேறு விரிவுரைக்கு இடம் இல்லை; உள்ளன்

# பெரிய புராணம்

புடன் பாராயணம் செய்து அருள் ஒருமை பெறுதல் ஒன்றே மாந்தர் கடமை; அந் நிலையை எட்டுவதே இப்போதுள்ள நமது முயற்சி. அளவிலாத பெருமையராகிய அடியார் புகழ் உரைப்பரிதாயினும், அளவில் ஆவல் துரப்ப உரைப்பதல்லது வேறு நிலை ஏது? தூய சொல் மலர்ப் பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவைதான் நாளும் வேண்டும். உலகினில் அது 'விதிமுறை விளங்கி வெல்க' எனப் போற்றுவோம்.

2

பெரிய புராணம், வாழ்க்கைவீரர் வரலாறுகளை விளக்கிச் செல்கின்றது. வாழ்க்கை வீரர் என்றாலும் அடியார் என்றாலும் ஒன்றே. அத்தகைய வீரர் அறுபத்துமூவர் வரலாறுகள் இந்நூலில் வருகின்றன. இவர் தனி அடியார் எனப் பெறுவர். பெயர் குறிக்காமல், பண்பமைந்த வாழ்வியல் வீரவுணர்வை மட்டுங்குறித்துப் பொதுப் படையாய்ச் சான்றோர் திறங்கள் ஒன்பது வகையில் வேறு காட்டப் பெறுகின்றன. அவ்வகையிற் குறிக்கப் பெற்றோர், தொகையடியார் எனப் பெறுவர்.

தனியடியார் அறுபத்து மூவரிலேயே அடியாருலகம் முழுதும் அடங்கிவிடாது; ஆதலால், தொகையடியார் எனவும் பொதுவாக அமைப்பது இன்றியமையாததாயிற்று. அடங்காதன வெல்லாம் இப் பகுதியில் அடங்கிவிடும்.

மக்கள், வாழ்வதற்காக உலகில் உடம்பெடுத்துப் பிறந்தனர். வாழ்வதாவது, பிறக்கும்போது இருக்கும் மருளியல்புகளை மெல்ல மெல்ல நீக்கிக் கொண்டு அருளியல் விளக்கங்களுடன் விளங்குவது என்பர் பெரியோர்.

இதற்கு இறைவனோடு தொடர்பு கொண்டு அவன் அருளியல்புகள் தம்மிடத்தில் இயங்கி விளங்கும்படி ஒவ்வொருவரும் மெய்யன்புடன் அருளிணக்கம் கொள்ளவேண்டும்.

இதற்குச் செய்முறை உண்டு. அது, பிறர்க்கென முயலுதல். அதாவது, இப் பெருவாழ்வைப் பிறர் பெறும்படி முயலுதல். நெஞ்சத்தில் ஈரம் பெருக்கெடுத்து அப்படி நாளும் முயன்றுவந்தால், யார்க்கும் அவரவர் வாழ்வுதானேவிளக்கம் அடைகின்றது.

இத்தகைய மெய்வாழ்வில் திகழ்வதற்காகவே, மக்கள், உலகத்திற் பிறந்து வளர்கின்றனர். வாழ்க்கையின் நோக்கம் அறிந்து வாழ்வியல் சிறக்கும்படி வாழ்வதே வாழ்வு; வாழ்க்கை வீரம்; அங்ஙனம் வாழ்வோர் வாழ்க்கை வீரராவர்! திருத்தொண்டராவர்!

மேன்மை வாய்ந்த இவ் வாழ்க்கை வீரர், செல்வராகவும் இருக்கலாம்; அல்லாதவராகவும் இருக்கலாம். பெருங் கல்வியாளராகவும் இருக்கலாம், சிறிதுங் கல்லாதவராகவும் இருக்கலாம்.

தொழிலாளராகவும் இருக்கலாம், தொழிற்கூடத் தலைவராகவும் இருக்கலாம். ஆட்சியாளராகவும் இருக்கலாம், குடிமக்களாகவும் இருக்கலாம். உயர்குலம், உயர்நிலை முதலிய நலங்கள் அமைந்தவராகவும் இருக்கலாம், அமையாதவராகவும் இருக்கலாம். அவரவர் மெய்யுணர்வுக்குத் தக்கபடி வாழ்க்கை வீரம் பெருகிவரும்.

வாழ்வு வீறு பெற்றவர், உலகுக்கு நாயன்மார். ஈர உள்ளத்தினால் இவ் வீரம் அவர்க்குப் பிறக்கின்றது.

அத்தகைய வாழ்வியற் பெரியோரே பெரிய புராணத்தின் தலைவர். சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறு நுவலும் நூலாகப் பெரியபுராணம் அமைந்திருக்கின்றது. அவர் வரலாறு நுவலும்போது இடையிடையே அவர் தொகுத்துக் கூறிய அறுபத்து மூவர் நாயன்மாரைப் பற்றியும் விளக்கங்கள் வருகின்றன. இதனாற் பலர் வாழ்க்கை வீரரைப் பெரியபுராணத்திற் காண்கின்றோம்.

அறுபான் மும்மை நாயன்மாரும் ஏனைத் தொகையடியார் ஒன்பதின்மரும், எடுக்கு மாக்கதைத் தலைவரான சுந்தரமூர்த்தி நாயனாரால் 'அடியார்க்கு அடியேன்' என்று வணக்கம் கூறப்பெற்றவர்.

தமிழ்த் தாய்.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

—புறநானூறு.



| கிளை | விகிருதி, மார்கழி | தளிர் |
|---|---|---|
| 3 | 12-1-51 வெள்ளி | 13 |



## - தைத் திருநாள் -

பொங்கல் பெருநாள் தைத் திருநாள்! ஒவ்வோர் ஆண்டிலும் பொங்கிய மகிழ்வுடன் இவ் விழாவை நாடு கொண்டாடுகின்றது!

உணவு வகைகளில், பொங்கல் ஒரு நல்ல செய்வகை! பலரும் விருப்பி உண்ணக்கூடியது. பச்சரிசியால் அமைவது; வலுப் பொருள் வாய்ந்தது. சூடாகவும் சுவையாகவும் உண்ணத் தகுந்தது.

யார்க்கும் பசி பொது; மேலும், அது முதல் தேவை. பசி தீர உண்பதற்குரிய விழா பொங்கல்! ஆதலால், இது, எல்லாராலும் முதன்மையாகக் கொண்டாடப்படும் பெருவிழாவாய் விளங்குகின்றது. பொங்கலுக்குள் அறுவடை முடிந்து புதிய நெல் கொண்டுவந்து பொங்கல் செய்யப்படும்.

பசிக்கு அடுத்த நிலையில் ஆடை தேவையாய்விட்டது. அதற்கும் அடுத்தபடி இருப்பிடம் இன்றியமையாததாய் எண்ணப்பட்டு விட்டது. பொங்கல் திருநாளில் இந்த இரண்டு தேவைகளையும் மக்கள் கவனிக்கின்றனர்.

புதிய ஆடைகள் பொங்கலுக்கு முன் ஆயத்தம் செய்து கொள்வது வழக்கம். இதனால், ஆடை நெய்வோருக்கு அப்போது அலுவல் மிகுதியாயிருக்கும். பொங்கல் கழித்தபின், அத் தொழிலாளர் ஒன்றிரண்டு கிழமைகள் ஓய்வெடுத்துக்கொள்வர்.

இருப்பிடத்தின் அமைப்பும் பொங்கலுக்கு முன் கருத்தூன்றி ஒழுங்கு செய்யப்பெறும்; வீடுகள் புதியவாய் அமைப்பதும் உண்டு. பழைய வீடுகளைப் பழுது பார்ப்பதும் உண்டு. அக்கம் பக்கங்களையும் ஒழுங்கும் தூய்மையும் செய்து, பல்வகைக் கோலங்களால் அழகு செய்வதில் அனைவரும் ஊக்கம எடுப்பர். வீடுகள் நிறந் தீட்டப்பெற்றுக் கலைக் கோயிலெனத் திகழும்.

பொங்கல் திருநாள் இவ்வாறு உணவு உடை இருப்பிடம் முதலிய வாழ்க்கைத் தேவைகளை ஒழுங்கு செய்துகொண்டு அமைதி பொங்குந் திருநாளாய் விளங்கி வருகின்றது.

உணவு உடை இருப்பிடம் முதலிய இந் நலங்களை, மக்கள், பொங்கல் திருநாளில் தம் உறவினர் நண்பர் முதலியோருடன் கலந்தபடியிருந்து நுகர்ந்து கொண்டாடுவர்; தாமே தனித்து நுகரார். பொங்கும் நல்லுணர்வும் உலக நலங்களும் இதனால் மேன் மேலும் மிகுந்து வரும்.

## - - செய்திகள் - -

ஆசியாவில் இடர்ப்பாடான நிலைமை இருக்கும்போது இந்தியாவுக்கும் பாகியத்தானுக்குமிடையே மன முறிவு உண்டாகும்படி 'காஷ்மீர்' சிக்கலை முற்றவிடுவது சரியன்று என்று அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் ஒரு கருத்திருக்கின்றது.

* *

ஒவ்வோர் அமெரிக்கப் படையினர்க்கும் 10,000 உயிர் நிதிப் பதிவை (இன்ஷ்யூரன்ஸ் பாலிஸியை) இனாமாகக் கொடுக்கும் சட்டம் அமெரிக்காவில் நிறைவேறி யிருக்கின்றது. கொரியா போரில் இறந்தவர்க்கு இதன்படி, பப்பத்தாயிரம் 'டாலர்' கிடைக்கும்.

* *

வெளிநாட்டுத் தோன்றல்களும், இதழாளர்களும் திரு. பட்டேலின் மறைவுக்காக ஆழ்ந்த துயரம் தெரிவித்து, "'இந்தியத் தூண்' 'இந்தியாவின் இரும்பு மனிதர்' 'பொறுப்பு வாய்ந்தவர்' 'முப்பெருந் தலைவருளொருவர்' 'காந்தியின் செயல் வீரர்' 'இந்தியக் குடியரசை உருவாக்கி வளர்ப்பதில் அரும்பணி யாற்றிய அரசியல் தந்திரி' இவர் இழப்பு இந்தியாவுக்கே பேரிடி போன்றதாகும்" என்றெல்லாம் புகழ் மாலை சூடினர்.

---

மழைகாலத்தில், மக்கள், குடும்பத்தோடு ஒன்றி மாதந்தோறும் நோன்புகள் எடுத்து அக வலிமைகளைப் பெருக்கிக்கொள்வர். அமைதியான சூழலோடு, உணவு உடை இருப்பிடம் முதலியவற்றிற்கும் ஆயத்தங்கள் செய்து கொள்வர். வெயிற்காலத்தில், வெளியூர்களில் உலாவி உலகத் தொண்டுகள் செய்வர்.

இது, தமிழ் மக்களுக்குச் சிறப்பான வழக்கம். ஆகவே, தை முதல் நாள், பொங்கிய உள்ளத்துடன் பொதுத் தொண்டுகளுக்குக் கால் கொள்ளும் தமிழர் திருநாள்! உலகத் திருநாள் என்றுங் கூறலாம்.

# சிந்திய - - - - - எண்ணங்கள்

[சி. து. க.]

## மாதர் பணி :

நாட்டில் மாதர் நிலைமை முற்காலத்தைவிட முன்னேறி உள்ளதாகத் தெரிகிறது.

கல்விப் பண்பாட்டில் அவர்கள் சிறந்து விளங்குதலைக் காண்கிறோம். ஆடவருக்கு ஒப்பாக மாதரும் நாட்டுப் பணியில் ஈடுபட்டுச் சிறந்த நிலையில் தொண்டாற்ற முடியும் என்பதனைக் கவியரசி சரோசனியார், விசயலட்சுமி பண்டிதையார் முதலானவர்களாற் கண்டுணர்ந்தோம்.

மென்மையும் தண்மையும் பொருந்திய முகில்களுக்கு உள்ளாக ஆற்றல் மிக்க மின் வன்மை மறைந்திருத்தல் போல, மாதர் உள்ளத்தில் மறைந்து வாழும் ஆற்றல், அவர்களால் வேண்டும்போது வெளிப்போந்து செயலாற்றக்கூடும் என்று அறிஞர் கூறுவது வீண் உரையன்று.

இத்தகைய நிலையில் மாதர் முன்னேற்றம் காணப்பட்டாலும், அதனால் நாட்டின் தொழிற்பண்பும் கலைப் பண்பும் அருட்பண்பும் முன்னாட்களைவிட முன்னேறி விட்டனவென்று சொல்ல இடமில்லாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம், மாதர், தம் இயல்பான நிலைமையிலிருந்து சிறிது சிறிதாக முற்றும் விலகி வேறான வழிகளில் தம் அறிவுச் செல்வத்தை ஈடுபடுத்தப் பார்க்கும் நிலைமையே.

அரசியல் துறை தொழில் துறைகளிலும், பிற அலுவல்களிலும், மாதர் ஈடுபடுவது தவறானது என்பது இதன் கருத்தன்று அப்படி ஈடுபடுவது நாட்டுப்பண்பினை ஒருபடி உயர்த்துவதற்கு வாயிலாக உதவுகிறது என்பதை மறுக்க முடியாது.

எனினும், மாதர்கள் இத்தகைய பணிகளில் ஈடுபடுவதன் மூலம் தாம் இயல்பாக மேற்கொள்ளவேண்டிய சிறந்த தொண்டுகளை அறவே மறந்துவிடக்கூடாது, முற்றிலும் புறத்துறைகளை மேற்கொள்ளல் நன்றன்று என்பதே கருத்து.

நாட்டுப்பணிக்குரிய எல்லாத் திறங்களும் இல்லறப் பண்பிலிருந்துதான் கிளைத்தெழுகின்றன. இல்லறப் பண்புக்கு மாதர் மட்டுமே இயல்பில் பொருத்தமானவர். 'மனைவி' என்ற சொல் மாதர் மனையறத்துக்கு உரியவரென்பதை நன்கு உணர்த்துகின்றது. ஆடவர் இதற்கு ஏற்றவர் அல்லர் என்பதை அம் 'மனைவி' என்ற சொல்லுக்கு ஆண்பாற் சொல்லாக 'மனைவன்' என்று இதுகாறும் வழங்காமை ஒன்றே எடுத்துக் காட்டுகின்றது.

மனைபறத்தில் மாதர்க்குரிய தொழிற்பண்பு, கலைப்பண்பு, அருட்பண்பு முதலியவை செறிவாகக் காணப்படுகின்றன. இல்லறம் செவ்வையாக நடப்பதிலிருந்தே நாட்டு முன்னேற்றத்துக்கான எல்லாத் தொண்டுகளும் ஒன்று பலவாய்ச் சிறந்து வெளிப்பட முடியும்.

மென்மையான இயல்புடையமாதர் தமது மனையறத்தின் மேம்பாட்டினால் ஆடவருக்கு மிகச்சிறந்த ஆற்றலை உண்டாக்க முடியும். செயற்கருஞ் செயல்களை நாட்டில் எளிதாகச் செய்விக்க முடியும். நல்ல புதல்வரையுந் தலைவரையுந் தோற்றுவிக்க முடியும்.

மாதருலகம் தகுதியில் நினைவு கொள்ளுமாக !

---

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

உள்ளத்தே யுறையும் மாலை
உள்ளுவான் உணர்வொன் றில்லாக்
கள்ளத்தேன் நானுந் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டு
உள்ளுவா ருள்ளிற் றெல்லாம்
உடனிருந் தறிதி யென்று
வெள்கிப்போய் என்னுள் ...
விலாவிறச் சிரி...

என ...
யாழ்வ ...

தேடு ...
னுள்ளே ...

என நாவ...
ருங் கூறியுள்ளன...

அவர்கள் தம்மிடத்தே ஆண்டவனை அறிவுமயமாகக் கண்டார்கள். ஆண்டவன் முற்றறிவு வுடையவன். இதையறிந்த வள்ளுவர் ஆண்டவனை 'வாலறிவன்' என்றார்.

உயிர், அறிவுடன் அறியாமையுஞ் சேர்ந்தது; நாம் முதலில் ஒன்றைச் சரியென்று காண்கின்றோம்; அதையே பிறகு தவறு என்று ஐயந்திரிபற உணர்கின்றோம்; இதனால், உயிர் அறியாமையுடன் கூடியதென்று உறுதிப்படுத்தலாம்.

நம்முன் நிற்கும் ஆண்டவனையும் நம் அறியாமை பற்றாதோ எனின், மாயையிடை வாழ்ந்தாலும் இராமலிங்கர், இராமகிருஷ்ணர் முதலானோர் பற்றின்றி வாழ்ந்ததுபோலப் பற்றமாட்டாது.

இந்நிலை பெற்றோர், ஆணவத்தோடு அத்துவித மானாற்போல் மெய்ஞ்ஞானத்தானுவினோடு அத்துவிதமானவர். தன்னையறியு மறிவை யறிந்த பிறகு,

"நானார், என்னுள்ளமார்,
ஞானங்களார்."

"தந்தது உன்றன்னை, கொண்டது என்றன்னை சங்கரா யார் கொலோ சதுரர்?"

என்று கேட்டுப் பேரா இயற்கையுற்று அயன்மையின்றி இறைவனுடன் கூடியிருப்பவர்.

ஆண்டவன் உண்மை நிலையைக் கண்ட அவர்கள், சாதி குலம் பிறப்பென்னும் சுழியிடைப்படார்; தமக்குத் துன்பம் வரினும்,

"அன்றே யென்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமும் குன்றே யனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ! இன்றோர் இடையூறு எனக்குண்டோ?"

எனச் ...

"கல்விலுஞ் செம்பிலுமோ
இருப்பான்"

என்று தன்னைத்தானே கேட்டுச் சிரித்தார் 'பட்டினத்தார்'.

"நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலுபுஷ்பஞ் சாத்தியே சுற்றிவந்து மொணமொ ணென்று சொல்லு மந்த்ர மேதடா, நட்ட கல்லும் பேசுமோ?......"

"கறிச்சுவை அறியுமோ?"

என உலகோரைப் பார்த்துச் சிரித்துக் கேட்டார் ஒரு கிராமத்தார். இப்படிச் சொல்லுகிறவர்களை இன்று சிலர் நாத்திகர் என்றும் அழைக்கின்றனர். சிலர் அப்படி அழைப்பதை விட்டுப் 'பத்திமான்க'ளென்று பரவுகின்றனர். காரணம், நடு நிலைமை தவறியா?

அவர்கள் உருவ வழிபாட்டைத் தடுத்து நிறுத்தவில்லை; 'கஜினி'யைப் போன்று கோடரி கொண்டு திருவுருவங்களைப் பிளக்கவில்லை; எங்கும் நிறைந்த இறைவன் தம்மிடத்திலும் இருக்கின்றான் என்பதை அறியும்படி செய்தார்கள்.

இந்த உண்மையை உணரும் வரை உலகத்தார்க்கு உருவ வழிபாடும் கட்டாய மென்பதைப் பட்டினத்தடிகளே "அத்தனை முப்பத்து மூக் கோடி தேவர்க் கதிபதியை"

'காணக்கண்கள் எத்தனை கோடி யுகமோ தவஞ்செய்திருந்தனவே' என்ற செய்யுளால் புலப்படுத்துகின்றார்.

மெய்கண்ட தேவரும்,

"செம்மலர் நோன்தாள்...........
ஆலயந்தானும் அரனெனத்
தொழுமே"

என்று ... ... ட்டு உணர்த்தினர்.

... கோ...

# நாத்திகர் யார்?

(வே. சா. ஏகாம்பரம்)

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்,
இலங்கும் உயிருடல் அனைத்தும்
ஈசன் கோயில்"

என்று கொண்டு, எவ்வுயிரிலும் அறிவாகி இயங்குபவன் தம்மிலும் இலங்குகின்றான் எனக் கண்டு, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணிப் பிறவற்றின் துயரையும் தம் துயராகவே கருதித் துடைத்தனர்.

வளர்ச்சியுடையன யாவும் உயிருடையன என்றும், உயிருடையவற்றிற்கெல்லாம் பசி, நீர்வேட்கை, பிணி, இன்ப துன்பம் உண்டென்றும், அப்படிச் செய்தால் நிழல் தன்னைத் தொடர்வதுபோல் தீவினையும் பற்றித் தொடருமென்றும், அவர்கள் உலகோர்க்கு உணர்த்தினர் என்று தம்மைத் தாமே அவர்கள் கேட்டுக் கொண்ட கேள்வியாலும் இது விளங்கும்.

எவ்வுயிரிலும் எங்கும் அணு அணுத்தோறும் ஆண்டவனைக் கண்ட அவர்கள்,

"சென்று சென்றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம் திருப்பெருந் துறையுறை சிவனே ஒன்று நீயல்லை அன்றி யொன்றில்லை யாருன்னை அறியகிற்பாரே"

என்று சொல்லிப் புகழ்ந்தார்கள். இந்த உண்மையை, எல்லாம் சத்தி மயமே (Energy) என்றும், அணுவிலும் (Atom) சத்தியுண்டென்றும் விஞ்ஞான ஆராய்ச்சியாளர் இன்று விளக்கமாகக் காண்கின்றனர்.

எனவே, 'அர்ச்சனை' செய்வதற்கே மலரெடுப்பினும் உயிருள்ள அச் செடி ... உயிர்க்குத் துன்பஞ் ... றும், அந்தத் ... ண்ட ... ன்றுங்

... பூசை
... மலரெடு
... லர் எடுக்க

என்று அப் பெரியோர் இரங்கிக் கூறி,

எங்கும் இருக்கின்ற இறைவன் தம்மிடத்திலும் இருக்கின்றான் எனக் கண்ட பிறகு, அவனை அயன்மையாகக் காணாமல் உருவ வழிபாட்டிலிருந்து உருவங் கடந்த வழிபாட்டுக்கு நம் முன்னோர் உயர்ந்தனர்.

இப்படி முடிந்த முடிவைக் கண்டவர்களும் நம் நாட்டில் விளங்கினர்.

உடம்பினை முன்னம் இழுக்கென்
றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள்
கண்டேன்
உடம்பிலே உத்தமன் கோயில்கொண்
டானென
உடம்பினை யானிருந் தோம்புகின்
றேனே.

எனத் திருமூலரும்,

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)


நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

நம்பிக்கை பெற்ற
ஆயுர்வேத உதவிகள்

காஸ்மஸ்
கஸ்தூரி மாத்திரை
கர்ஜன்
கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ்
பேதியாக மாத்திரை
சிசுராக் குழந்தை டானிக்
பிமலெக்ஸ் டானிக்
யூடிருல்
கர்ப்பிணிகளுக்கு
டோனடெல்
பிரஸவமானபின் டானிக்
ஹிஸ்மெறேடானிக்
பிரதமென்ஸ்
சூதக கோளாறுகளுக்கு

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை. 1

(2-ம் பக்கம் தொடர்ச்சி)

லத்தில் என் உடன் பிறந்தார் பன்னூற்றுக் கணக்கில் உள்ளனர். அவரெல்லாம், 'சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும்' வாழ்வியல் வீரராய், மொழி கலை தொழில் பணி அருள் என்னும் ஐவகை ஆக்கப் பணித் தொண்டராய், புதிய நல்லுலகத்தை உருவாக்கி எழுப்பி அதனைத் தூண் எனத் தாங்கியுதவும் சான்றாண்மைப்பண்பினராய் உயர்ந்து வாழுமாறு செய்வது இன்னொரு வகை; கிராம சேவை, ஒன்றே குலம், ஆட்சி யுணர்வு, கல்வி யறிவு, பொருள் செயல் வகை, நல்லுணவுப் பெருக்கம், குடிசைத் தொழில், இயற்கை மருத்துவம், மன்பதைப் பணி, சிற்றுயிர்ப் பணி, சான்றாண்மை இயக்கம், பிறவி நலம் என்னும் பணித் திட்டம் பன்னிருவகையில் நாட்டுப் பணி செய்தல் மற்றொரு வகை. இவைபோல எங்கள் தொண்டுகள் ஒரு கடல். இவற்றிற்காக என் தந்தை சென்னையில் விரிவுரைகள் நிகழ்த்தி வாக்காலும், மாம்பாக்கத்தில் செயலுழைப்பெடுத்து உடம்பாலும், திருக்கழுக்குன்றத்தில் இருந்து அருள் நினைத்து மனத்தாலும், பணி புரிந்து எங்களுக்கு வழிகாட்டி அழைத்துச் செல்வார்.

மல்—உன் வரையில் நீ என்ன பணிகள் செய்வாய்?

முல்—தந்தையின் கருத்துக்களை உலகுக்குத் தெரிவிப்பது, உறுதுணையாய் நிற்பது.

மல்—அப்படியானால் என்னையும் உன்னோடு சேர்த்துக்கொள்வாயா? மறந்துவிடாதே. நானும் உன் தோழி தானே! எனக்கும் எவ்வளவோ விருப்பமாயிருக்கிறது.

முல்—(முல்லைச் சிரிப்புடன் தலையசைத்து) மறக்கமாட்டேன்; மல்லிகா கிழமைக்கு ஒரு முறை நான் உலாப்போவேன்; உன்னையும் மாதம் ஒரு முறையோ அல்லது இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ உலாவிப் பணிசெய்விக்க முயல்வேன்.

மல்—சரி, மறுமுறை பணி உலாக் கோலத்திலேயே வந்துவிடுகிறேன். வணக்கம். (மல்லிகா திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கிறாள்).

"நினைத்த தெத்தனையின் தவறு மல்......முல்லைக்கொடி பாடுகிறாள்.

# தமிழ்த் தாய்த் தசாங்கம்

( நலங்கிள்ளி )

4. யாறு

செய்யவாய்ப் பைஞ்சிறகின் செல்வி! நஞ் சிந்தைவாழ்
மைதீர் மணிமொழியாள் ஆறுரையாய்-உய்யநாம்
கால்பலவாய் ஓடிக் கழனியாற் கூழூட்டும்
வேலைவிஞ்சுங் காவிரியே மேவு.

5. மலை

கிஞ்சுகவாய் அஞ்சுகமே! கேடில் மொழிக்காசி
வஞ்சி மருவு மலைபகராய்-நெஞ்சத்
திருளகற்றச் செந்தமிழர் எக்காலும் நோக்கும்
அறிவுமலை யன்றோ அது.

6. ஊர்தி

இப்பாடே வந்தியப்பு, கூடுபுகல் என்கிளியே!
ஒப்பில் தமிழரசி ஊர்வதென்னே-இப்பாரில்
எந்நாடும் வன்பால் இடறிவிழத் தானென்றும்
அன்பினையே ஊருவள்காண் ஆய்ந்து.

Telegrams: "RAMBROS"
N. Ramu Bros;
GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COI[illegible]ATORE.

[illegible]ரும்,
'மு[illegible]க் கண்டு[illegible]கொடி'க்கு
[illegible]தேடிக் க[illegible]
எல்[illegible]ங்களிலும்
[illegible]க்கரச[illegible]
விற்பனை[illegible]ர் தேவை.

கைத்தறி ஆடைகள்
வணிகக் குறி !
—N. K. M.—
தங்க நாடா
( பதிவு )
எண் 20 முதல் 100 வரையில் வேட்டி, சேலை, துண்டு, போர்வை, மேலாடை முதலியவை பல வகைகளிற் கிடைக்கும்.
நூலாடைகட்கும்
பட்டாடைகட்கும்
நம்பிக்கையான இடம்:
கருப்பண முதலியார்,
துணி வாணிபம்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

## "முல்லைக் கொடி"

குருகுலத்தின் கிழமை இதழ்.

நல்ல தமிழில்;

எல்லார்க்கும் புரியும் வகையில்,

உரிய விலையில்,

வாழ்வின் பலதுறைக் கருத்தில்,

சீர்திருத்த முறையில்,

சிறந்த ஆக்கப் பணி உருவில்

வெள்ளிக் கிழமைதோறும்

வெளிவரும்

ஒரு பெருந்தன்மையான

உணர்ச்சி வெளியீடு!

ஆண்டுக் கையொப்பம் ரூ. 4

வெளிநாட்டுக்கு ரூ. 5

குறிப்பு :—

1. கார்த்திகை விழா முதல் (24-11-50) 'முல்லைக் கொடி' புத் ஒளி பெற்று வெளிவருகின்றது. ஆண்டுக் கையொப்பமாகச் சேர்வோர், ஒரு மாதத்துக்குள் (பொங்கல் நாளுக் குள்) விரைவிற் சேர்தல் வேண்டும். அவர்க்கு இதழ்கள் குறைவின்றிக் கிடைக்கும்.

காலந்தாழ்ந்து [illegible] வார், சேரும் நாளிலிருந்து [illegible] ரிவரும் [illegible] இதழ்கள் மட்[illegible] கிடைக்கப் பெறுவர்.

2. குருகுலத்தார்க்குக் கட்டணம் இல்லை; தமிழாசிரியர்க்கும், திருவள்ளுவர் கழகங்களுக்கும் ஆண்டுக் கையொப்பம் ரூ 3 மட்டும்.

3. 'முல்லைக் கொடிக்' கையொப்பங்கள் ஒவ்வோர் ஆண்டிலும் புரட்டாசித் கலைமகள் விழாவுடன் நிறைவேறும்.


# குருகுலம், மாம்பாக்கம்;

( வடதிருச்சிற்றம்பலப் பெருவெளி )

மதுராந்தகம் (அஞ்.)

இது,

திருக்குறள் மறைக்குச்

**செய்கை நிலையம்.**

நாட்டு மக்கள். 'மொழி' 'கலை' 'தொழில்' 'அருள்'

'பணி' என்னும் ஐவகை வாழ்வியல்

திறமைகளிற் சிறந்து திகழ்வதற்கு

முயல்வது.

பள்ளி, கல்லூரி, கலையரங்கு, அச்சகம்,

நூற்பதிப்ப[illegible] படிப்பகம்,

தொழில[illegible]ம் முதலிய

பல்வகை[illegible]ணி புரிவது.

**வாழி, மன்பதை !**

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர் : தி. [illegible] அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம் (அஞ்.).